ஜி.எஸ்.டி. வரி வருவாயில் - மாநிலங்களுக்கு

60 சதவிகிதம் வழங்கிட - சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும்!

மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் வலியுறுத்தல்!

புதுடெல்லி, ஆக 7-

ஜி.எஸ்.டி. வரி வருவாயில் 60% வருவாயை மாநிலங்களுக்கு வழங்க ஜி.எஸ்.டி. சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்று ஒன்றிய அரசிடம் டி.எம்.கதிர் ஆனந்த் மக்களவையில் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் பேசியதாவது:

ஜூலை 2017 முதல் ஜி.எஸ்.டி. எனும் சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, ஜி.எஸ்.டி.யில் உள்ள சிக்கல்களால் தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் தங்கள் அதிகார வரம்புக்குள் இருந்த சாத்தியமான வரி வருமானத்தை இழக்கின்றன.

நாடு முழுவதும் உள்ள பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு பொதுவான வரி விகிதத்தை முன்மொழிந்ததால், பல மாநிலங்கள் ஜி.எஸ்.டி.யை எதிர்த்தன. இதன் காரணமாக பல்வேறு பொருட்களின் மீதான வரி விகிதங்களை நிர்ணயிக்கும் அதிகாரத்தை மாநிலங்கள் இழக்க நேரிடும், இது நிதி தன்னாட்சி, கூட்டாட்சி தத்துவம் மற்றும் அவற்றின் சுயாட்சியை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

மேலும் வரிக் கட்டமைப்பின் சிக்கலான தன்மை, MSMEகள் மீதான இணக்கச் சுமைகள், போலி விலைப்பட்டியல்களால் வருவாய் கசிவுகள் மற்றும் மோசடியான உள்ளீட்டு வரி கோரிக்கைகள் ஆகியவை ஜி.எஸ்.டி. அமலாக்கத்தின் முக்கிய சவால்கள் ஆகும்.

பரந்த வரி அடிப்படை மற்றும் மேம்படுத்தப்பட்ட இணக்கம் காரணமாக ஜி.எஸ்.டி.யின் கீழ் மத்திய அரசின் வரி வருவாய் கணிசமாக அதிகரித்துள்ளது. ஐஜி.எஸ்.டி. மற்றும் செஸ் வசூல் மத்திய அரசின் வருவாயில் கூடுதலாக சேர்த்துள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் ஜி.எஸ்.டி. என்பது மாநிலங்களுக்கு எதிரான பாரபட்ச நிதி பகிர்வு ஆகும். தற்போது, (i) SGST எனப்படும் 50% GST, மாநிலங்களின் வருவாய் விகிதத்தில் மாநிலங்களுக்கிடையே பகிர்ந்து கொள்ளப்படுகிறது, மேலும் (ii) CGST எனப்படும் மீதமுள்ள 50% இந்தியாவின் ஒருங்கிணைந்த நிதியின் ஒரு பகுதியாகும்.

சிஜி.எஸ்.டி. சட்டத்தின் பிரிவு 8, அனைத்து மாநிலங்களுக்கு இடையேயான பொருட்கள் மற்றும்/அல்லது சேவைகளின் மீதும் வரி விதிக்கப்படும், ஆனால் வரி விகிதம் ஒவ்வொன்றும் 14%க்கு மேல் இருக்கக்கூடாது என்பது விதி.

ஜி.எஸ்.டி. வரி வருவாயில் 40% ஐ மத்திய அரசுக்கும், 60% மாநிலங்களுக்கும் பகிர்ந்தளிக்கும் முறை என்ற சட்ட திருத்தத்தை ஒன்றிய அரசு கொண்டு வந்தால் மட்டுமே மத்திய கருவூலத்தில் இருந்து பல்வேறு மாநிலங்களுக்கு இழைக்கப்படும் அநீதி, அதிகபட்ச அலட்சியமும், சமமற்ற நிதிப் பகிர்வும் தவிர்க்கப்படும். SGST 60% மற்றும் CGST 40%.

GST ஆட்சியின் கீழ், IGST ஆனது நுகர்வு மாநிலத்திற்கும் யூனியன் அரசாங்கத்திற்கும் இடையில் மட்டுமே பகிர்ந்து கொள்ளப்படுகிறது, அங்கு உற்பத்தி மாநிலங்கள் பூஜ்யத்தைப் பெறுகின்றன. மாநில அரசுகள் உற்பத்தி மற்றும் வர்த்தகத்தை மேம்படுத்த பல வழிகளில் தொழில்களை ஊக்குவிக்கிறது. ஆனால் ஜி.எஸ்.டி. ஆட்சியில் அவர்களுக்கு ஈடாக எதுவும் கிடைக்காது. எனவே ஜி.எஸ்.டி.யின் பகிர்வு முறை உற்பத்தியாளர் மற்றும் நுகர்வோர் மாநிலங்களுக்கு தலா 30% மற்றும் யூனியன் அரசாங்கத்திற்கு 40% மாற்றப்படலாம். (30% உற்பத்தியாளர் மாநிலத்திற்கு 30% நுகர்வோர் மாநிலத்திற்கு 40% மையத்திற்கு)

எனவே, ஒன்றிய அரசின் மத்திய கருவூலத்தில் இருந்து சமமான வருவாயைப் பகிர்ந்தளிப்பதற்கு மாநிலங்களுக்கும் மையத்துக்கும் இடையிலான ஜி.எஸ்.டி. வருவாயைப் பகிர்ந்து கொள்ளும் முறையில் மாற்றங்களை ஏற்படுத்த, அந்தந்த சட்டங்களில் இதுபோன்ற பொருத்தமான திருத்தங்களைச் செய்யுமாறு மத்திய அரசை நான் வலியுறுத்துகிறேன்.

டி.எம்.கதிர் ஆனந்த் நாடாளுமன்ற மக்களவையில் விதி எண் 377 கீழ் ஒன்றிய அரசிடம் வலியுறுத்தினார்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் ரூ 7.15 கோடியில்

19 மருத்துவமனைக் கட்டடங்கள்!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் திறந்து வைத்தனர்!

இராமநாதபுரம், ஆக.7-

இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நேற்று (06.08.2024) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் மூலம் புதிதாக கட்டப்பட்ட மருத்துவமனை கட்டடங்கள் திறந்து வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன்,இ.ஆ.ப., , இராமநாதபுரம் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்து ராமலிங்கம் , பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் ஆகியோர் தலைமையேற்று புதிய மருத்துவமனை கட்டடங்களை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசுகையில்,

தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் சுகாதாரத்தை பாதுகாக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள். கடந்த மூன்று ஆண்டுகளில் மக்களைத்தேடி மருத்துவம், இன்னுயிர் காக்கும் திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கடந்த மூன்று ஆண்டுகளில் எண்ணற்ற அரசு மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்பட்டதுடன் புதிதாக கூடுதல் கட்டடங்கள் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் இன்று மட்டும் 19 கட்டடங்கள் ரூ.7.15 கோடி மதிப்பீட்டில் கட்டி திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதுமட்டுமின்றி 86 கோடி மதிப்பீட்டில் புதிதாக 36 மருத்துவமனை கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

பொது சுகாதாரத்துறையின் வளர்ச்சி நகர்ப்புற வளர்ச்சிக்கு இணையாக தரங்கள் மேம்படுத்தப்பட்டு மருத்துவ உட்கட்டமைப்புகள் கட்டப்பட்டு வருகின்றது.

இராமநாதபுரம் மாவட்டத்தை பொறுத்தவரை மருத்துவத்துறையின் பணிகள் மிகச் சிறப்பாக உள்ளன. மகப்பேறு சிகிச்சையை பொருத்தவரை 70மூ பொதுமக்கள் பயன்பெற்று வருகிறார்கள் என்பது பாராட்டக்கூடியதாகும். இன்று சத்திரக்குடி அரசு ஆரம்ப சுகாதார நிலையம் ஆய்வு செய்யப்பட்டது. கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேல் இங்கு மகப்பேறு இறப்பு இல்லை என்பதை கண்டறியும் பொழுது மருத்துவர்கள், பணியாளர்கள், செவிலியர்கள் அனைவருக்கும் பாராட்டு தெரிவிப்பதுடன் அவர்களுடன் அமர்ந்து தேநீர் அருந்தியதில் மகிழ்ச்சி பெற்றேன். இதேபோல் ஒவ்வொரு மருத்துவமனையும் சிறப்பாக செயல்பட வேண்டும்.

மருத்துவ சேவை என்பது மிக உன்னத பணியாகும். அத்தகைய பணியில் உள்ள நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும். ஒரு சில மருத்துவர்களின் செயல் வருத்தத்தை அளிக்கிறது. இருந்தபோதிலும் ஏராளமான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்கள்.

இதேபோல் காலியாக உள்ள மருத்துவ பணியிடங்கள் விரைவில் நியமிக்கப்படும். தமிழகத்தில் மருத்துவத் துறையின் திட்டங்கள் குறித்து கடந்த மாதம் நான் அமெரிக்கா சென்ற பொழுது திட்டங்கள் குறித்து அங்குள்ள மருத்துவர்களிடம் எடுத்துரைக்கும் பொழுது தெரிவித்த கருத்து என்னவென்றால் ஊரக வளர்ச்சி திட்டங்கள் போற்றக்கூடிய திட்டமாக உள்ளது என்று பாராட்டினார்கள். அதுமட்டுமின்றி இத்திட்டம் உலகம் முழுவதும் செயல்படுத்த வேண்டும் என்று உலக சுகாதாரத் துறை கருத்து தெரிவித்துள்ளது. இத்தகைய புகழ் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கே சேரும். இன்னுயிர் காக்கும் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகள் குறித்து தொலைபேசியில் அவர்களிடம் பேசிய பொழுது பயன்பெற்ற பயனாளிகள் இத்திட்டத்தால் நான் உயிர்பெற்றது மிகுந்த பாக்கியமாகும். அதை தந்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே. அவர்களுக்கு நான் வாழ்நாள் முழுவதும் கடன் பெற்றவனே ஆவேன் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தது இத்திட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மருத்துவ மனையிலும் 10 முதல் 50க்கும் மேற்பட்ட உயிர்கள் பாதுகாக்கப்பட்டது என்பது இத்திட்டத்தின் வெற்றியாகும்.

இதேபோல் நாய்கடிக்கான தடுப்பூசி, பாம்பு கடிக்கான தடுப்பூசி தலைமை மருத்துவமனையில் மட்டுமே இருந்து வந்தது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவால் கிராமப் பகுதியில் உள்ள அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் இந்த தடுப்பூசிகள் போதியளவு இருப்பில் உள்ளதென்றால் அது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டங்களே ஆகும். இதுபோல் எண்ணற்ற திட்டங்களை தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கி வருகிறார்கள். இத்திட்டங்களை பெற்று பயன்பெற வேண்டுமென மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

தொடர்ந்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் , பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் ஆகியோர் இராமநாதபுரம் சுகாதார பிரிவு மாவட்டத்தில் சித்தூர் துணை சுகாதார நிலையம் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம், திருவெற்றிய10ர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர் குடியிருப்பு ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம், பெரியபட்டிணம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய பகுதி முத்துப்பேட்டை துணை சுகாதார நிலையம் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் மற்றும் உச்சிப்புளி வட்டார மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார ஆய்வுக்கூட அலகு கட்டிடம், தேவிப்பட்டிணம் வட்டார மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொது சுகாதார ஆய்வுக்கூட அலகு கட்டிடம், ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் அத்தியூத்து துணை சுகாதார நிலையம் மேலும் பார்த்திபனூர் வட்டார மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொதுசுகாதார ஆய்வுக்கூடம் அலகு கட்டிடம், கடலாடி வட்டாரத்தில் மேலச்சிறுபோது அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புறநோயாளிகள் பிரிவு கட்டிடம், வாலிநோக்கம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புறநோயாளிகள் பிரிவு கட்டிடம் வி.வி.ஆர். நகரில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடம், பரமக்குடி வட்டாரம் நென்மேனியில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் துணை சுகாதார நிலைய கட்டிடம், முதுகுளத்தூர் வட்டாரத்தில் கீரனூர், பூசேரி மற்றும் நல்லூர் ஆகிய இடங்களில் தலா ரூ.30 இலட்சம் வீதம் மூன்று துணை சுகாதார நிலைய கட்டிடங்கள், நயினார்கோவில் வட்டாரத்தில், நயினார்கோவில் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் புறநோயாளிகள் பிரிவு கட்டிடம் மற்றும் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கிளியூர் துணை சுகாதார நிலையம், கமுதி வட்டாரத்தில் பேரையூர் மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் வட்டார பொதுசுகாதார ஆய்வுக்கூட அலகு கட்டிடம், ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கோவிலாங்குளம் துணை சுகாதார நிலைய கட்டிடங்கள் என ரூ.7.15 கோடி மதிப்பீட்டில் புதிதாக பொதுசுகாதாரத்துறை கட்டிடங்களை திறந்து வைத்தனர்.

பின்னர் மக்களைத்தேடி மருத்துவம், டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டம் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கண்ணொளி காப்போம் திட்டத்தின் கீழ் 50 பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் பெருமக்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் பரமக்குடி சார் ஆட்சியர் செல்வி. அபிலாஷா கௌர், பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்புத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், பொதுசுகாதாரத்துறை துணை இயக்குநர்கள் மரு. இந்திரா, மரு.அர்ஜுன்குமார், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் உ.திசை வீரன், மாவட்ட ஊராட்சி குழு துணைத்தலைவர் வி.வேலுச்சாமி , ஊராட்சி மன்ற தலைவர் திருமதி. சுகன்யா மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சிகள் - அமைதிப் பேரணி

குன்றத்தூர் தெற்கு ஒன்றியக் கழகத்தினர் பங்கேற்பீர்!

ஒன்றியக் கூட்டத்தில் தீர்மானம்! படப்பை ஆ.மனோகரன் அறிவிப்பு!

காஞ்சிபுரம், ஆக. 7 -

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக அவசர செயற்குழு கூட்டம் ஒன்றிய கழக அவைத்தலைவர் மு.சுப்பிரமணி தலைமையில் நடைபெற்றது. இதில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் படப்பை ஆ. மனோகரன் சிறப்புரையாற்றினார். இதில் ஒன்றிய குழு பெருந்தலைவர் சரஸ்வதி மனோகரன், ஒன்றிய கழக நிர்வாகிகள் வ.நந்த கோபால், ஏ.மணி, வாசுகி மகேஷ், சி.பார்த்தசாரதி, மு.இராஜேந்திரன் மா.பரி மேலழகன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் பொன். ரமேஷ் கவி, எஸ்.கர்ணன், சங்கீதா வேலு, தினேஷ் கந்தசாமி, கு.ஏழுமலை, வி. எஸ்.கோதண்டராமன், மலர்வழி தமிழ்அமுதன், ஜி.ஏ. ராயப்பன், எஸ். வைரம், ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் ப. அறிவொளி, ரா தீபக்ராஜ், கா.ப. ஆடலரசு, மா.சே. பிரகாஷ், லோ.சுதாகர், அ. ஜமீர், இரா.குமரவேல், ஆர்.சையத்ரமிஸ், இ. பாலாஜி, மகாலட்சுமி எட்டியப்பன், மல்லிகா நடராஜன், சோபா ரகுநாதன், ஏ.இ. பஞ்சாட்சரம், ஜி. இருசப்பன், ப. வேல்முருகன், இரா.சந்திரசேகர், ச.ரஞ்சித் குமார், மற்றும் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் இளைஞரணி அமைப்பாளர்கள் மகளிர் அணி அமைப்பாளர்கள் மாணவர் அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

மறைந்தும் மறையாமல் நம் நெஞ்சங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வருகின்ற 07.08.2024 அன்று சென்னை ஓமந்தூரார் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலை அருகில் இருந்து கழகத் தலைவர் திராவிட மாடல் முதல்வர் தளபதி அவர்களின் தலைமையிலே நடைபெற உள்ள அமைதி பேரணியில் பங்கேற்பதெனவும் குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் கழக கொடி கம்பங்களின் கீழே முத்தமிழறிஞர் டாக்டர்.கலைஞர் அவர்களின் உருவப்படத்தை அலங்கரித்து மலர் மாலை அணிவித்து நினைவு நாள் நினைவஞ்சலி போற்றுவதெனவும் ஏக மனதாக தீர்மானிக்கப் பட்டது.

முதல்வருக்கு வரவேற்பு!

திருபெரும்புதூர் ஒன்றியம் வல்லம் சிப்காட் பகுதியில் 18.08.2024அன்று பணிபுரியும் மகளிர்க்காக பிரம்மாண்டமாக கட்டப்பட்டிருக்கும் மகளிர் விடுதியினை திறந்து வைக்க வருகை தரும் கழக தலைவர் திராவிட மாடல் முதல்வர் மு.க ஸ்டாலின் அவர்களுக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் அறிவிக்கப்படும் இடத்தில் மாபெரும் வரவேற்பு அளித்திடும் நிகழ்ச்சியில் குன்றத்தூர் தெற்கு ஒன்றியத்தை சேர்ந்த கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் அனைவரும் பெருமளவில் பங்கேற்பதெனவும் கட்டிட திறப்பு விழா நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பிப்பதென ஏகமானதாக தீர்மானிக்கப் பட்டது.

உறுப்பினர்கள் சேர்த்தல்!

குன்றத்தூர் தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஊராட்சிகளில் கிளை வாரியாக இல்லம்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் மற்றும் மகளிர் அணி உறுப்பினர் சேர்த்தல் பணி கீழே குறிப்பிட்டுள்ள விபரப்படி நடைபெற உள்ளது. காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அறிவிப்பின்படி தலைமை செயற்குழு உறுப்பினர் க.அன்புச்செல்வன் இந்த உறுப்பினர்கள் சேர்த்தல் பணிக்கு மாவட்டகழக சிறப்பு பிரதிநிதியாக வருகை தந்து சிறப்பித்திட உள்ளார். நூறாண்டு கண்ட இயக்கமாம் திராவிட இயக்கத்தின் வழி தோன்றலாக தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்தியாவிலே தமிழகத்தை முன்மாதிரி மாநிலமாக கொண்டு செல்லும் கழக தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையில் கழகம் மேலும் வலிமை பெறவும் கழக இளைஞரணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் துணையோடு இன்னும் 50 ஆண்டுகாலம் திராவிட பேரியக்கமான நமது கழகம் அடித்தட்டு மக்களின் வளர்ச்சிக்காகவும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைகளை காத்திடவும் கழகத்தை வளர்த்திட சுமார் 15 வயது முதல் 35 வயது வரையிலான இளைஞர் அணி தோழர்களை கழக இளைஞர் அணியில் உறுப்பினர்களாக சேர்த்து திராவிட மாடலை இந்திய ஒன்றியம் முழுமைக்கும் கொண்டு செல்வதற்கான சீரிய பணிக்கு கிளைக் கழக நிர்வாகிகள் மாவட்ட ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் இளைஞர் அணி மகளிர் அணி நிர்வாகிகள் அனைவரும் தனிக் கவனம் செலுத்தி இளைஞர் அணி மகளிர் அணிக்கு அதிக உறுப்பினர்களை சேர்த்திடவும் இந்நிகழ்ச்சிகாக முன்கூட்டியே துண்டு பிரசுரம் அச்சடித்து கழக நிர்வாகிகளுக்கும் பொதுமக்களுக்கும் முன்கூட்டியே வழங்கி நிகழ்ச்சி எழுச்சியோடு நடைபெற செயலாற்றிட வேண்டுமென ஒருமனதாக தீர்மானிக்கப் பட்டது.

மு.இ.ஏழுமலை தலைமை! வெஃபாஸ் த. பத்மநாபன் ஏற்பாட்டில்

சுற்றுச்சூழல் அணி சார்பில் கலைஞர் நினைவு நாள்! அறுசுவை உணவு!

மயிலை த. வேலு எம்.எல்.ஏ. நந்தனம் மதி எம். சி. வழங்குகின்றனர்!

சென்னை, ஆக 7-

வரலாறு பேசும் வரலாற்று நாயகன், திருவள்ளுவர் இளங்கோவடிகள் வழிவந்த கவிமகன், இருபதாம் நூற்றாண்டின் தமிழ்த்தாயின் தலை மகன், நீதிக்கட்சி வழிவந்த நீதி மகன், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியாரின் பகுத்தறிவுமகன், அறிவுத்தந்தை அறிஞர் அண்ணாவின் கொள்கைமகன், உலகம் எங்கும் வாழும் தமிழர்களின் தமிழ்மகன், பைந்தமிழ் மன்னரின், அன்னை தமிழை தேன் கலந்த சுவையாய் படைத்த, முத்தமிழ் அறிஞரின், நமது இதயங்களில், தாய் தமிழாய் வாழ்ந்து கொண்டிருக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின், 6ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு, இன்று 7.8.2024 புதன்கிழமை காலை, சென்னை தென்மேற்கு மாவட்டம், சுற்றுச்சூழல் அணி சார்பாக, மயிலை மேற்கு பகுதி, 123 வது வட்ட கழகத்தில் உள்ள டாக்டர் ரங்கா ரோட்டில், முத்தமிழறிஞர் கலைஞரின் அவர்களின், திருஉருவ படத்திற்கு, 123வது வட்ட கழகத்தின் சார்பில், மாவட்ட, பகுதி, வட்ட கழக, BLA2 / BLC நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் மலர் தூவி, மலர் அஞ்சலி செலுத்தி, பொது மக்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி, சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் வெஃபாஸ் த. பத்மநாபன் ஏற்பாட்டில், வட்ட செயலாளர் மு.இ.ஏழுமலை தலைமையில், மயிலை மேற்கு பகுதி செயலாளர் மற்றும் 121 வது மாமன்ற உறுப்பினர் நந்தனம் மதி எம் சி அவர்களின் முன்னிலையில், மாவட்ட கழக செயலாளர் மற்றும் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த. வேலு எம் எல்ஏ அறுசுவை உணவு வழங்குகிறார்.

நினைவஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில், 123 வது வட்ட கழகத்திற்குட்பட்ட, மாவட்ட, பகுதி, வட்ட கழக, BLA2 / BLC நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் மற்றும் கழக உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு, முத்தமிழறிஞர் கலைஞரின் அவர்களின் திருஉருவ படத்திற்கு, மலர் தூவி , மலரஞ்சலி செலுத்துகின்றனர்.

மயிலை 126வது வட்டத்தில்

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் படத்திறப்பு!

வட்டச் செயலாளர் கோ கண்ணன் தலைமையில்!

சென்னை, ஆக. 7-

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 126வது வட்டத்தில் வட்ட செயலாளர் கோ கண்ணன் தலைமையில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 6ஆம் ஆண்டு நினைவுநாள் முன்னிட்டு இன்று : 07.08.2024 புதன்கிழமை காலை 9 மணிக்கு படதிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சிகள்; (1) நம்பிக்கை நகர், (2) வன்னியம்பதி வி கே ஐயர் ரோடு சந்திப்பு, (3)ஆண்டிமான்ய தோட்டம் பஸ் டிப்போ, (4)பாரதிநகர் மாதாகோவில், (5)பெரியக் காரக்குட்டை 13வது தெரு,(6)ஆர் கே மடம் அருணகிரி சாலை சந்திப்பு ஆகிய பகுதிகளில் நடைபெறுகிறது.

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை.த.வேலு.எம்.எல்.ஏ. கலந்து கொண்டு பொதுமக்கள் 500 பேருக்கு அறுசுவை உணவு வழங்குகிறார்கள்.

இந்நிகழ்ச்சி மயிலை கிழக்கு பகுதி கழக செயலாளர் எஸ்.முரளி முன்னிலையில் நடைபெறும் மாநில, மாவட்ட நிர்வாகிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கோ கண்ணன் வட்ட செயலாளர்கேட்டுக்கோள்கிறார்.

கலைஞர் நினைவு நாள் அமைதிப் பேரணி - அலைகடலெனத் திரண்டு வாரீர்!

சென்னை தென்மேற்கு மாவட்டத்தில் - 100 இடங்களில் - கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை, ஆக. 7 -

வேளச்சேரி மேற்குப் பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் பகுதிக் கழகத்தினருக்கு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

இன்று (07-08-2024 புதன்கிழமை) காலை 7:00 மணிக்கு நம் இதயத்தில் என்றென்றும் வாழ்ந்து

கொண்டு இருக்கும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ம் ஆண்டு நினைவைப் போற்றும் வகையில் அமைதிப் பேரணி நடைபெற உள்ளது.

கழக தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாவட்ட கழக செயலாளர்மா.சுப்பிரமணியன் வேண்டுகோளுக்கு இணங்க நடைபெறும் அமைதி பேரணியில் வேளச்சேரி மேற்கு பகுதிக்கு உட்பட்ட மாநில மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் மாவட்ட துணை அமைப்பாளர்கள், அனைத்து அணிகளின் பகுதி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், சார்பு மன்ற நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் பங்கேற்று நினைவு அஞ்சலி செலுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் அரிமா சு.சேகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தலைமை: எஸ்.ஆர். ராஜாசுரேஷ் குமார், முன்னிலை: நந்தனம் கி.மதி எம்.சி.

மயிலை மேற்கு 122 வது வட்டம் சார்பில் கலைஞர் நினைவு நாள் நிகழ்ச்சி!

மயிலை த.வேலு எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, ஆக 7-

நவீன தமிழகத்தின் சிற்பி, தமிழினத் தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆறாவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி 122 வது வட்டத்தில் 7.8.2024, புதன்கிழமை இன்று மதியம் 12 மணிக்கு பின்வரும் இடங்களில் வட்டச் செயலாளர் எஸ் ஆர் ராஜா சுரேஷ்குமார் அவர்கள் தலைமையில், மாவட்ட செயலாளர், மயிலை சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, எம்.எல்.ஏ., மயிலை மேற்கு பகுதி, பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி. பின்வரும் இடங்களில் கலைஞர் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி அறுசுவை உணவு வழங்குகிறார்கள்.

அறுசுவை உணவு வழங்கும் இடங்கள் மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்:

ஆழ்வார்பேட்டை தெரு - திருவள்ளுவர் சாலை சந்திப்பில் அண்ணா சிலை அருகில் - அறுசுவை உணவு, எம் பிரபாகரன், டி ரகு, அரவிந்த் ரமேஷ்

ஆழ்வார்பேட்டை தெரு - டி.டி.கே. சாலை சந்திப்பு, நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்: ஜி என். கணேசன். ஏ.சிங்கார வேலு, ஏ.பி. ஜெகநாதன்.

ஆலையம்மன் கோயில் சந்திப்பில்- நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்: கேபிள் சீனு, இ.கே.மதி, ஆ.அல மேலு, கா.குமார்.

எஸ்.எம்.நகர் ஏ முதல் ஜெ பிளாக் வரை - நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்: வி ஜான்சன், டி அருள்சாமி ஜி.செந்தில்.

எஸ்.எம்.நகர் 56 முதல் 70 பிளாக் வரை - நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்: டிங்கர் கே.பாலு

டேங்க் பண்ட் சாலை, அண்ணா சிலை - நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள்: மாஸ்டர் ஆனந்த் என் திருவேங்கடம், லோகேஷ்.

இந்நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக பொறுப்பாளர்கள், பாக முகவர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தோழர்கள் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி வட்டக் கழக சார்பில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் 6 ஆம் ஆண்டு நினைவு நாள்:

சைதை 172 அ வட்டத்தில் 500 பேருக்கு உணவு வழங்கல்!

வட்டச் செயலாளர் எஸ்.ஆர்.செந்தில் அறிவிப்பு!

சென்னை, ஆக. 7-

சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்டச் செயலாளர் எஸ்.ஆர். செந்தில் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சைதை கிழக்குப் பகுதி 172 அ வட்ட கழக சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் நினைவு நாளான இன்று (7-8-2024 புதன்கிழமை) சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் - அமைச்சர் மா.சுசுப்ரமணியன் அறிவுறுத்தலின்படி சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், பகுதி கழகச் செயலாளர் இரா.துரைராஜ் ஆகியோரது ஆலோசனைப்படி, 172 அ வட்டம் ஐந்து பர்லாங் சாலையில் 500 பேருக்கு மத்திய உணவு வழங்கப்படுகிறது. மேலும் சாத்தானிபேட்டையில் 500 பேருக்கு இரண்டு இடங்களில் உணவு வழங்கப்படுகிறது.

இதில் மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மகளிர் அணி, மாணவர் அணி, விளையாட்டு மற்றும் அமைப்பு தொழிலாளர் அணி, இலக்கிய அணி, சார்பு மன்ற நிர்வாகிகள், மற்றும் கழகத் தோழர்கள், அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் எஸ்.ஆர். செந்தில் தெரிவித்துள்ளார்.